**வாக்குமூலம்**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி**
**சி.சி.எண்.324/16**
**வழக்கு சாட்சி – அ.சா.5**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுருளிவேல் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | சுருளி | தொழில் | நான் வீட்டில் இருந்து வருகிறேன். |
| கிராமம் | உத்தமபாளையம் | சமயம் | |
| தாலுக்கா | உத்தமபாளையம் | வயது | 73 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.03.24

**( 1,2 எதிரிகள் ஆஜர் இல்லை. 1,2 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

அசா1 மணிகண்டன் எனது மகன். எதிரிகளை எனக்கு தெரியும். எங்களுக்கு சர்ச்சில் பாஸ்டராக இருந்தவரை எனக்கு தெரியும். அவரிடம் எங்களுடைய கஷ்டங்களை சொன்னோம். அப்போது அவர் ஆண்டிபட்டியில் உள்ள பாஸ்டர் விக்டர் தெரியும் என்றும், அவரை எங்களிடம் அறிமுகம் செய்து வைத்தார். விக்டர் மற்றும் அவரின் மனைவி அனிதா எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வந்து செல்வார்கள். என்னுடைய மகள் தனலட்சுமிக்கு விக்டர் மற்றும் அனிதா வேலை வாங்கி கொடுப்பதாக கூறினார்கள். இபியில் எழுத்தர் பணி இருப்பதாகவும், எனக்கு தெரிந்த பெரிய அதிகாரிகளிடம் ரூ3,50,000/– கொடுத்தால் அந்த வேலை கிடைத்துவிடும் என்று கூறினார்கள். எனது மகள் தனலட்சுமி மற்றும் அவரதுகணவர் முருகன் ஆகியோர் கடன் வாங்கி ரூ3,50,000/– த்தை ஆண்டிபட்டியில் விக்டர் மற்றும் அனிதாவின் வீட்டில் வைத்து 2012ம் வரும் கொடுத்தார்கள். நான் எனது மகன் EEE படித்துள்ளார். விக்டர் எனது மகன் என்ன படித்துள்ளார் என்று கேட்டார். அவரிடம் நாங்கள் கூறினோம். அதற்கு அவர் எனக்கு சென்னையில் பெரியஅதிகாரிகளை தெரியும் என்றும், வேலை இருந்தால் சொல்கிறேன் என்றும் கூறினார். அப்போது 2013ம் வருடம் எனது மகன்

மணிகண்டனுக்கு இபியில் இருந்து உதவிபொறியாளர் பணிக்கு நேர்முக தேர்வுக்கு கடிதம் வந்தது. நாங்கள் அந்த கடிதத்தை விக்டர் மற்றும் அனிதாவிடம் காட்டினோம். அவர் கேட்டு சொல்வதாக கூறினார். ஒரு வாரம் கழித்து பெரியஅதிகாரிகளிடம் பேசிவிட்டேன் என்றும் ரூ.11 லட்சம் கொடுத்தால் வேலை வாங்கிவிடலாம் என்று கூறினார். அதற்கு பிறகு எனது வீட்டை விற்ற று ரூ.4 லட்சம் முன்பணமாக கொடுதேன். எனது மருமகன் தவமணி மூலமாக ரூ.3 லட்சம் கொடுத்தோம். அதன்பின்னர் ரூ.1 லட்சம் கொடுத்தோம். அதன்பின்னர் எதிரிகள் சென்னை சென்று பணம் கொடுத்தால் தான் வேலை கொடுப்பார்கள் என்று கூறியதால் ரூ 2 லட்சம் கொடுத்தோம். எனது மகள் தனலட்சுமிக்கும் மகன் மணிகண்டனுக்கும் சேர்த்து மொத்தம் ரூ.14,50,000/-த்தை எதிரிகளிடம் கொடுத்தோம். அதன்பின்னர் 6 மாதம் கழித்து வேலை எதுவும் கிடைக்கவில்லை என்று எதிரிகளிடம் விபரம் கேட்டபோது விக்டர் வேலை கிடைத்துவிடும் என்று எங்களை சமாதானம் செய்தார். ஆனால் அதன்பின்னர் வேலை கிடைக்கவில்லை. எங்கள் பணத்திற்கு அத்தாட்சி வேண்டும் என்று எதிரிகளிடம் கேட்டபோது விக்டர் மற்றும் அனிதா எங்களுக்கு பணத்திற்காக பத்திரத்தில் தனலட்சுமிக்கு எழுதி கொடுத்தார்கள். மேலும் சிறிது நாட்கள் கழித்து வருமாறு சிறிதளவு பணத்தை கொடுப்பதாகவும் கூறினார். மேலும் அவர்களிடம் கேட்டபோது எதிரிகள் சரியாக பதில் கூறாமல் பேசிவந்தார்கள். நாங்கள் அப்போது வேலை எங்களுக்கு வேண்டாம் என்றும் பணத்தை கொடுத்துவிடுமாறு கேட்டோம். சிறிது நாட்கள் கழித்து தனலட்சுமி பெயரில் ரூ.8 லட்சத்திற்கான வங்கி காசோலை கொடுத்தார். அதை வசூலுக்கு தாக்கல் செய்த போது பணம் இல்லை என திருப்பப்பட்டுவிட்டது. மறுபடியும் எதிரிகளிடம் சென்று கேட்டபோது எதிரிகள் மற்றொரு காசோலையை ஈஸ்வரியின் பெயரில் ரூ.6,50,000/-த்திற்கான காசோலை கொடுத்தார். அதை வசூலுக்கு தாக்கல் செய்த போது பணம் இல்லை என திருப்பப்பட்டுவிட்டது. மீண்டும் எதிரிகளிடம் கேட்டோம். மீண்டும் மணிகண்டன் பேரில் 14,50,000/- வங்கி காசோலை கொடுத்தார். அதை எடுத்து வசூலுக்கு தாக்கல் செய்த போது பணம் இல்லை என திருப்பப்பட்டுவிட்டது. மறுபடியும் கேட்ட போது கையில் பணத்தை கொடுப்பதாக சொன்னார். 3 அல்லது 4 லட்சம் பணத்தை

கொடுத்தார். மேலும் இரண்டு தவணைகளாக ரூ50 ஆயிரம் கொடுத்தார். மீத பணத்தை 1 மாதம் கழித்து வாங்கி கொள்ளும்படி கூறினார். நாங்கள் 1 மாதம் கழித்து கேட்டபோது ஆட்களை வைத்து உங்களை கஷ்டபடுத்திவிடுவேன் என்று கூறினார். நாங்கள் திரும்பி வந்துவிட்டோம். அதன்பின்னர் தேனி எஸ்பி அலுவலகத்தில் புகார் கொடுத்தோம். அப்போது எதிரிகளிடமிருந்து போலிசார் எங்களுக்கு ரூ5 லட்சம் பணத்தை பெற்றுக்கொடுத்தார்கள். நாங்கள் வாங்கி கொண்டோம். எதிரிகள் மீதி ரூ.4,50,000/- தரவேண்டும். அதை 2,3 நாட்களில் கொடுத்துவிடுவதாக கூறினார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1,2 எதிரிகள் தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை** செய்யபடவில்லை.